# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 17/2021**

2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ம் தேதி திங்கள் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிவேல் | தொழில் | : விற்பனையாளர் |
| தந்தை பெயர் | : ஆறுமுகம் | சமயம் | : |
| கிராமம் | : ஒதியத்தூர் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 43 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் ஒதியத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன குலசேகரன் என்பவர் என்னுடன் பணிபுரிந்து வந்தார்.

2. கடந்த 25.11.2019 ந் தேதி காலை 9.00 மணி அளவில் செஞ்சியில் இருந்து ந.பி.பெற்றாள் ஊரில் உள்ள ரேசன்கடைக்கு அவரது இருசக்கர வாகனத்தில் சென்றபோது செஞ்சி டு திருவண்ணாமலை சாலையில் சிறுவாடு முட்டக்காட்டின் அருகே எதிரே வந்த சிப்ட் கார் மோதி விபத்து ஏற்பட்டதில் காலிலும், மண்டையிலும் காயமடைந்தார். நான் ரேசன் கடையில் விற்பனையாளராக பணிபுரிவதற்காக இருசக்கர வாகனம் ஓட்டிச்சென்ற குலசேகரனின் பின்னால் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றேன். அப்போதுதான் மேற்படி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தை நேரில் பார்த்து நடந்த விவரத்தை குலசேகரனின் மனைவிக்கு கைப்பேசி மூலமாக தகவல் சொன்னேன். விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவு எண். 03AG0968 ஆகும். ஆஜர் எதிரிதான் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டியவர். பிறகு காயம் அடைந்த குலசேகரனை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் ஏற்றிச்சென்றோம். செஞ்சி அரசு மருத்துவமனையில் முடியாது என்று சொல்லி மேல்சிகிச்சைக்காக ஜிப்மர் மருத்துவமனைக்குபோக சொன்னார்கள். செஞ்சி அரசு மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்கு செல்ல வெளியே வந்த நிலையில் குலசேகரன் இறந்துவிட்டார். பிறகு செஞ்சி அரசு மருத்துவமனையிலேயே பிரேத பரிசோதனை செய்து சடலத்தை ஒப்படைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

எனக்கு முன்னால் குலசேகரன் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றாரா என்றால் ஆமாம். எவ்வளவு தூர இடைவெளியில் இருசக்கர வாகனம் ஓட்டிச்சென்றேன் என்றால் 100 அடி தூரம் இருக்கும். நான் ஒட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் TN08B1858 ஆகும். மேற்படி விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். விபத்து நடந்த இடம் வளைவான சாலை பகுதி என்றால் சரிதான். எதிரில் வரும் வாகனம் தெரியாத அளவிற்கு வளைவாக இருக்கும் என்றால் சரிதான். அங்கு நிதானமாக தான் செல்லமுடியும் என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று கூறமுடியுமா என்றால் காரால் தான் ஏற்பட்டது. இடது புறமாகத்தான் குலசேகரன் சென்றார். விபத்து நடந்தபோது எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் அச்சமயத்தில் வேறு யாரும் இல்லை. காரை ஓட்டியது யார் என்று தெரியாது என்றால் ஆஜர் எதிரிதான். விபத்துக்கு பிறகு எத்தனை பேர் அங்கு வந்தார்கள் என்றால் 4, 5 பேர் இருக்கும். அப்போது ஆஜர் எதிரியை நான் பார்த்தேனா என்றால் அப்போதும் பார்த்தேன். இந்த விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். குலசேகரனின் மனைவி தகவல் தெரிந்து அங்கு வந்தாரா என்றால் இல்லை. செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்தார். விபத்து நடந்தபோது குலசேகரனின் மனைவி எங்கிருந்தார் என்றால் அது தெரியாது. எவ்வளவு நேரம் கழித்து குலசேகரனின் மனைவி வந்தார் என்றால் சுமார் 1 மணி நேரத்திற்குள் வந்துவிட்டார். போலிசார் நான் சொல்லசொல்ல வாக்குமூலமாக ஏதேனும் எழுதினார்களா என்றால் இல்லை. எந்த தேதியில் போலிசார் விசாரித்தார்கள் என்றால் அன்றைய தினமே விசாரித்தார்கள். விபத்து நடந்த இடத்திற்கு குலசேகரனின் மனைவி வரவில்லை என்றால் சரிதான். புகாரை யார் கொடுத்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:** இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.